முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.05.2024,** செவ்வாய்கிழமை

1. அறமாக ஞான வழி காட்டி
அவதாரம் வேலவன் அம்சமாக
வரமாக மக்களிடை அருளுகின்ற
வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் துல்லிய ஆசி
வரங்களாக குரோதி தகர் திங்கள்
வல்லமைபட அறுநான்கு திகதி குசன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 24 ம் நாள், 07.05.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரம்போகா ஞான உலகம் அமைய
சுத்த நெறி கொண்ட வழிகாட்டலாக
4. ஆகவே மக்களுக்கு ஞானமருளி
ஆசிதீட்சை அருளமுதும் தருகின்ற
மகான் அரங்கனே கலியின்
மாதவசியே உலகமாற்றம் செய்யவந்த
5. வந்தநல் அரங்கமகா ஞானியரின்
வருகையை உலகம் எங்கும்
சிந்தைமகிழ கொண்டு சென்று
சுத்த சன்மார்க்க நெறி முறைதனை
6. முறையாக மக்கள் ஏற்கும்படி
முழுமைபட சரணாகதி காணும்படி
குறைவிலா வழிகாட்டல் தனை
குருவே என அரங்கமகான் சீடர்மக்கள்
7. சீடர்மக்கள் சேவையாகச் செய்து
செயல்பாட்டை மிகுதியாக்கி
இடர்வெல்ல அரங்கன் வகுத்த
இணையில்லா அன்னதான சேவையை

8. சேவையை உலகெல்லாம் துவக்கி
செகத்தில் பசிபிணி இல்லாத வண்ணம்
அவனியின் வறுமையை விரட்டி
ஆற்றல்பட தருமவளம் பெருக்கி

9. பெருக்கியே தயவுநெறி ஏற்று
பெருமான்களாக தருமவழி உதவி
கருத்தாக தருமவான்கள் என
கலியினில் அடையாளம் கூட்டி

10. கூட்டியே தருமவான்கள் ஞானவான்கள்
குவலயம் எங்கிலும் உருவாக்கிட
கட்டமான கலியின் கொடுமைகள்
கட்டாயம் உலகை விட்டகன்று

11. அகன்று ஞானத்தலைமையாக
ஆறுமுகனார் வழிநடத்துகின்ற
யுகமாற்றமாக ஞானயுகமாற்றம்
உயர்வாய் கண்டு அற்புதம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—